# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2009 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2009, செத்தெம்பர் மாதம் 11 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ. ஓ. (கூட்) 7/2006

### அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நம்பிக்கைப் பொறுப்பொன்று அதன் நம்பிக்கைப் பொறுப் பாளர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்போடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறை வேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கென இதற்கு முன் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காக அது உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள் களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றி வந்துள்ளதனாலும் அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப் பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "நம்பிக்கைப் பொறுப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் உறுப்பினர்களாக தற்போது உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும்

2-PL 003878 -1,070 (2009/05)

அத்தகையோரான அத்தனை ஆட்களும் "அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பு" (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்பட்ட பள்ளிவாசல்கள், குர்ஆன் மத்ரஸாக்கள் மற்றும் தர்காக்கள் என்பவற்றை பராமரித்தலும் புனரமைப்புச் செய்தலும் தேவைப்படுமிடத்து புதிய மத்ரஸாக்களை நிறுவுதலும் ;

(ஆ) ஜாமிஅதுல் - றப்பானிய்யா அறபுக் கலாபீடத்தை முகாமை செய்து பராமரித்தல் ;

(இ) இஸ்லாமிய மதத்தில் நல்ல அறிவை அளிக்கும் பொருட்டு மௌலவிமார்களுக்குப் பயிற்சி அளித்தல் ;

(ஈ) மௌலவிமார்களுக்கான கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் ஆன்மீகப் பயிற்சிகளையும் ஒழுங்கு செய்தலும் மற்றும் நடாத்துதலும் ;

(உ) இஸ்லாமிய கோட்பாடாகிய "சூபித்துவத்தை" போதிப்பதனாலும் மற்றும் சாத்விகத்தின் பால் வழிகாட்டுவதனாலும் இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றுகின்ற ஆட்களிடையே ஆத்மீக வளர்ச்சியை மேம்படுத்துதல் ;

(ஊ) இஸ்லாத்துக்குப் பெருந்தொண்டாற்றிய இஸ்லாமிய மதப் பெரியார்களின் நினைவு தினங்களைக் கொண்டாடுதலும் அத்தகைய பெரியார்களின் வாழ்க்கைமுறைகளை இஸ்லாத்தைப் பின்பற்றுகின்ற ஆட்கள் கற்பதற்கு ஏற்பாடுசெய்தலும் ;

(எ) அஜ்மீர் காஜா முயினுத்தீன் (ஜிஸ்தி) அவர்களினதும் மற்றும் வேறு இஸ்லாமியப் பெரியார்களினதும் நினைவு வைபவங்களில் கலந்துகொள்ளும் மக்களுக்கு அன்னதானம் வழங்குதல் ;

(ஏ) முஸ்லிம்களான சிறுவர்கள், இளைஞர்கள், வயோதிபர்கள் ஆகியோரின் நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் ; அத்துடன்

(ஐ) இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குவதில் வேறு உள்நாட்டு வெளிநாட்டு ஒழுங்கமைப்புக்களுடன் கூட்டிணைந்து செயலாற்றுதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனமானது தத்துவமுடையதாதல், வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல் செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் மானிக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல் மற்றும் வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அத்தகைய விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடியவர்களான அல்லது நியமிக்கப்படக் கூடியவர்களான தலைவரொருவரையும் பதினொரு உறுப்பினர்களையும் கொண்டமைந்த முகாமைச்சபை ஒன்றினால் (இதனகத்துப்பின்னர் "முகாமைச் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்தியநாளன்று பதவி வகித்த நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையாகவிருத்தல் வேண்டும்.

(3) ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டமுடியாத நிலைமைகளில் தீர்மானங்கள் எடுப்பதற்கான பூரண அதிகாரம் தலைவருக்கு இருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக வஷிய்யத்- ஆலோசனை வழங்கும் அதிகாரம் இருத்தலும் வேண்டும்.

(4) முகாமைச் சபை உறுப்பினர் ஒருவர் இறக்கும் பட்சத்தில் அல்லது பதவி விலகும் பட்சத்தில் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படும் பட்சத்தில் அவ்வெற்றிடமானது இச்சட்டத்தின் ஏற்பாடுகமைவாக 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு இணங்க நிரப்பப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. *(1)* பொதுக்கூட்டமெதிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாத உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மையைக் கொண்டு கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், மீளப்பெறுதல், வெளியேற்றுதல் என்பவற்றுக்காகவும் பதவி தாங்குநர்களையும் முகாமைச் சபை உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்காகவும் பொதுவில் வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாப

னத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றில் அதேபோன்ற முறையில் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அல்லது அவற்றிக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் இப்பிரிவின் நியதிகளுக் கிணங்க ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந் தோராதல் வேண்டும்.

மன்றத்தால் செலுத்தப்படற் பாலனவும் நம்பிக்கைப் பொறுப்புக்குச் செலுத்தப்படற் பானவுமான கடன்கள்.

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நம்பிக்கைப்பொறுப்புக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்க ளும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப் படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நம்பிக்கைப் பொறுப்புக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப் படற்பாலனவையான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களைக் கூட்டுத்தாபனம் வைத்திருந்து கையாளலாம்.

**8**. கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபன விதிகளுக்கமைவாக ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக வரக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏனும் ஆதனத்தைக் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும் சட்டப்படி இயலுமான தாயும் ஆற்றலுடையதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக, அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையாகக் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டாத நிறுவனமாக விருத்தல் வேண்டும்.

**9**. எவ்வகையிலேனும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணங்களும் ஆதனங்களும் இதன்கண் எடுத்துக்கூறப் பட்ட அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் எப்பாகமும் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பங்கிலாபம், கடன், மிகையூதியம் என்ற வகையாக அல்லது இலாபம் என்ற வகையாக எவ்விதத்திலேனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றை தடைசெய்தலாகாது : -

(அ) கூட்டுத்தாபனத்துக்கு ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காகக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு நல்லெண்ணத்துடன் நியாயமானதும் தகுந்தளவுமான ஊதியத்தைக் கொடுப்பனவு செய்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால் அல்லது கூட்டுத்தாபன உறுப்பினரொருவர் பங்குதாரராகவுள்ள ஏதேனும் கம்பெனியால் கூட்டுத்தாபனத்துக்கு வாடகைக்கு விடப்பட்ட வளவுகளுக்கு நியாயமானதும் தகுந்ததுமான வாடகையைக் கொடுப்பனவு செய்தல் ; அத்துடன்

(இ) தமது பணிகளை அல்லது கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது புரிவதில் அல்லது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் எவராலும் முகாமைச் சபையின் முன்அங்கீகாரத்துடன் உறப்பட்ட நியாயமானதும் தகுந்ததுமான செலவுகளைத் திருப்பிக் கொடுத்தல் அல்லது மீளக் கொடுப்பனவு செய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**10.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்துக்கு அன்பளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்புகள், கைமாற்றங்கள், ஒப்பப்பணம், உதவுதொகைகள் மற்றும் கட்டணங்கள் என்றவகையாக அதனால் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் முகாமைச் சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்று மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லா செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**11.** (1) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது கூட்டுத்தாபனத்தின் வருமானமும் செலவினமும் அத்துடன் சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் மற்ற எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகுந்த கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின்கீழுள்ள பள்ளிவாசல்கள், மத்ரஸாக்கள், அறபுக் கலாபீடம், தொண்டு நிறுவனங்கள் என்பவற்றின் கணக்குகள் தனித்தனியாகப் பேணப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் முகாமைச் சபையினால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளரொருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,-

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவரான ஆள் ஒருவர் என்று பொருளாகும் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக விருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று என்று பொருளாகும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் விதிகளால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறாக தலைவர் மற்றும் செயலாளர் அல்லது அத்தகைய வேறு உறுப்பினர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனங்கள் எதிலும்

பொறிக்கப்படலாகாதென்பதுடன், மேற்சொல்லப்பட்டவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலும் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கலைப்பின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன்பின்னர் எத்தன்மையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்தக் கழகம் அல்லது கழகங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப் பட்டுள்ளதோ அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் கழகமாக அல்லது கழகங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையுமான வேறேதேனும் கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கழகம் அல்லது கழகங்கள் பற்றிக் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால், கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்